யாழ். வலயக் கல்வித் திணைக்களத்தின் அனுசரணையுடன்
தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்

# Field Work Centre

FWC

## தவணைப் பரீட்சை, யூன்- 2015

## Term Examination, June - 2015

| தரம் :- 13 (2015) | இலங்கை வரலாறு | நேரம் :- 3 மணித்தியாலம் |
|---|---|---|

❖ 1 – 50 வரையான வினாக்கள் ஒவ்வொன்றிலும் ஐந்து பெயர்கள் வீதம் தரப்பட்டுள்ளன. அப்பெயர்களுள் ஒன்று ஏதோ காரணத்தினால் ஏனையவற்றுடன் பொருந்தாது. பொருந்தாத அப்பெயரை இனங்கண்டு அதன் இலக்கத்தைப் புள்ளிக்கோட்டில் எழுதுக.

பகுதி - I

1) 1) சூகரதித்த 2) அம்பதித்த 3) கொடவாய
4) மகாதித்த 5) பல்லவவங்க (..........)

2) 1) தெவனாகலை கல்வெட்டு 2) அம்பகமுவ கல்வெட்டு 3) பனாகடுவ செப்பேடு
4) நயினாதீவுதமிழ்க்கல்வெட்டு 5) தோணிகல கல்வெட்டு (..........)

3) 1) மணிஹீரவாவி 2) கவுடுல்லவாவி 3) கங்கதடாவாவி
4) ஹுருளுவாவி 5) மாமினியவாவி (..........)

4) 1) மந்தாரம் புர 2) ஸ்ரீவர்த்தனபுர 3) செங்கடகலபுர
4) கங்காஸ்ரீபுர 5) ஸ்ரீவர்ணபுர (..........)

5) 1) றொபேட் பிறவுன்றிக் 2) வில்மட்ஹோர்டன் 3) லோறன்ஸ் பீல்
4) றொபேட்சாமேர்ஸ் 5) வில்லியம் கிரெகரி (..........)

❖ 6 – 10 வரையான வினாக்கள் ஒவ்வொன்றிலும் ஐந்து சோடிப் பெயர்கள் தரப்பட்டுள்ளன. அவற்றுள் ஒரு சோடியிலுள்ள பெயர்கள் ஒன்றுடனொன்று பொருந்தவில்லை. பொருந்தாத அச்சோடியை இனங்கண்டு அதன் இலக்கத்தைப் புள்ளிக்கோட்டில் எழுதுக.

6) 1) தம்பதெனியா - ஜம்புதோணிபுர
2) யாப்பகூவ - சுபபவ்வத
3) குருநாகல் - அத்துகல்புர
4) கம்பளை - மந்தாரம்புர
5) கோட்டை - ஸ்ரீ ஜயவர்த்தனபுர (..........)

7) 1) ஆஸ்தான குமாரன் - 2ம் ராஜசிங்கன்
2) கோணப்பு பண்டார - 1ம் விமலதர்மசூரியன்
3) டிகிரி பண்டார - 1ம் ராஜசிங்கன்
4) பெரியபண்டார - தர்மபாலன்
5) அம்புலுகல குமாரன் - 6ம் புவனேகபாகு (..........)

8) 1) உபதிஸ்ஸகம - கதம்ப நதி
2) தீககாம - குடிகந்த நதி
3) உருவெலகாம - கோண நதி
4) விஜிதகாம - மகாவாலுகா நதி
5) கஜரகம - கப்பந்தர நதி (..........)

9) 1) 1797 – 98 கிளர்ச்சி - தோமஸ் மெயிற்லன்ட்
2) 1817 – 18 கிளர்ச்சி - றொபேட் பிறவுன்றிக்
3) 1848 கிளர்ச்சி - வைகவுன்ட் டொறிங்ரன்
4) 1883 கொட்டாஞ்சேனைக் கலவரம் - ஜேம்ஸ் லோங்டன்

5) 1915 சிங்கள – முஸ்லிம் கலவரம் - றொபேட் சாமேர்ஸ் (..........)

10) 1) தோமஸ் மெயிற்லன்ட் - ஜூரிசபை நிறுவப்பட்டமை
2) எட்வேட்பாண்ஸ் - கொழும்பு – கண்டி பிரதானவீதி அமைக்கப்பட்டமை
3) ஆதர் ஹவ்லொக் - தானியவரி நீக்கப்பட்டமை
4) ஹென்றிவோட் - நீர்ப்பாசனத் திணைக்களம் உருவாக்கப்பட்டமை
5) வில்லியம் கிரகெரி - அருங்காட்சியகம் நிறுவப்பட்டமை (..........)

❖ **11 – 15 வரையான வினாக்களில் நிரல் X இல் உள்ள விபரங்களுக்குப் பொருத்தமாக Y இல் உள்ளவற்றை இணைக்கும்போது கிடைக்கும் சரியான விடையினை இனங்கண்டு அதன் இலக்கத்தைப் புள்ளிக்கோட்டில் எழுதுக.**

11)

| X | Y |
|---|---|
| 1) அனுராதபுர காலம் | A - மயூரசந்தேஸ |
| 2) பொலநறுவைக் காலம் | B - சியபஸ்லகர |
| 3) குருநாகல் காலம் | C - மந்தாரம்புர புவத |
| 4) கம்பளைக்காலம் | D - ஸஸதாவத |
| 5) கண்டிமன்னனர் காலம் | E – தலதாசிறித |

1) CBDAE 2) BDEAC 3) DABEC 4) BEDAC 5) CEBAD (..........)

12)

| X | Y |
|---|---|
| 1) சூரதிஸ்ஸன் | A - ஸ்ரீமாற ஸ்ரீவல்லபன் |
| 2) வங்கநாசிகதீஸன் | B - பண்டுபாரிந்தன் |
| 3) முதலாம் சேனன் | C - சேனன், குத்திகன் |
| 4) 4ம் உதயன் | D - கரிகாற்சோழன் |
| 5) மித்தசேனன் | E - முதலாம் பராந்தகன் |

1) CAEBD 2) DAEBC 3) BCEAD 4) CDAEB 5) EABDC (..........)

13)

| X | Y |
|---|---|
| 1) கிராம நிர்வாகம் | A - கொண்டவற்றவான் சாசனம் |
| 2) சந்தை நகர முகாமைத்துவம் | B - வெஸ்ஸகிரிக் கற்பலகைச் சாசனம் |
| 3) குளத்திலிருந்து நீரை விநியோகித்தல் | C - பதுளை தூண் சாசனம் |
| 4) பிக்குமார்களுக்கான விதி | D - வல்லிபுரச் சாசனம் |
| 5) விகாரை ஒன்று நிறுவப்படல் | E - களுதிய பொடுண சாசனம் |

1) AECDB 2) EADBC 3) ACBED 4) CABED 5) BAECD (..........)

14)

| X | Y |
|---|---|
| 1) மல்வத்து ஓயா | A - எலஹரஅணை |
| 2) தெதுறு ஓயா | B - கல்கடவள அணை |
| 3) அம்பன் கங்கை | C - தன்கட்டிய அணை |
| 4) மகாவலிகங்கை | D - ரிதிபென்தி அணை |
| 5) வளவை கங்கை | E - மினிப்பே அணை |

1) BDAEC 2) ABDEC 3) BAECD 4) CAEDB 5) BDEAC (..........)

15)

| X | Y |
|---|---|
| 1) குருந்துவாவி | A - முதலாம் விஜயபாகு |
| 2) கங்கதடாவாவி | B - இரண்டாம் அக்போ |
| 3) மணிஹீரவாவி | C - இரண்டாம் முகலன் |
| 4) பத்தகுணவாவி | D - முதலாம் அக்போ |
| 5) பத்தபாசாணவாவி | E - மகாசேனன் |

1) DBAEC 2) BEDAC 3) CABEC 4) CBDEA 5) DBEAC (..........)

❖ **16 – 20 வரையான ஒவ்வொரு வினாவிலும் சரியான விடையைத் தெரிவு செய்து அதன் இலக்கத்தைப் புள்ளிக்கோட்டில் எழுதுக.**

16) இலங்கையில் புத்தர் தரிசித்ததாகக் குறிப்பிடப்படும் இடங்களைக் காலக்கிரம வரிசையில் சரியாகக் காட்டுவது
1) நாகதீபம், களனி, மகியங்கணை, சிவனொளிபாதமலை
2) மகியங்கணை, களனி, நாகதீபம் சிவனொளிபாதமலை
3) சிவனொளிபாதமலை, களனி, நாகதீபம், மகியங்கணை
4) மகியங்கணை, நாகதீபம், களனி, சிவனொளிபாதமலை
5) களனி, மகியங்கணை, நாகதீபம், சிவனொளிபாதமலை (..........)

17) பின்வரும் மன்னர்களைக் கால ஒழுங்கில் சரியாகக் காட்டுவது
1) சத்தாதீசன், வலகம்பா, தூலத்தனன், கல்லாடநாகன், லஞ்சதீசன்
2) லஞ்சதீசன், கல்லாடநாகன், தூலத்தனன், சந்தாதீசன், வலகம்பா
3) சத்தாதீசன், தூலத்தனன், லஞ்சதீசன், கல்லாடநாகன், வலகம்பா
4) லஞ்சதீசன், கல்லாடநாகன், சத்தாதீசன், தூலத்தனன், வலகம்பா
5) சத்தாதீசன், லஞ்சதீசன், கல்லாடநாகன், வலகம்பா, தூலத்தனன் (..........)

18) பின்வரும் பௌத்தக் கல்வி நிலையங்களைக் கால ஒழுங்கில் சரியாகக்காட்டுவது
1) ஆலாஹன பிரிவெனா, ஸ்ரீகணானந்தபிரிவெனா, தீகசந்தபிரிவெனா, சுனேத்திராதேவி பிரிவெனா
2) தீகசந்த பிரிவெனா, ஆலாஹன பிரிவெனா, ஸ்ரீகணாநந்த பிரிவெனா, சுனேந்திராதேவி பிரிவெனா
3) தீகசந்த பிரிவெனா, ஸ்ரீகணாநந்த பிரிவெனா, சுனேந்திராதேவி பிரிவெனா, ஆலாஹன பரிவெனா
4) ஸ்ரீகணானந்த பிரிவெனா, தீகசந்தபிரிவெனா, ஆலாகனபிரிவெனா, சுனேந்திராதேவி பிரிவெனா
5) சுனேத்திராதேவி பிரிவெனா, ஆலாஹனபிரிவெனா, தீகசந்த பிரிவெனா, ஸ்ரீகணானந்த பிரிவெனா (..........)

19) இலங்கையில் அமைக்கப்பட்ட கால்வாய்களைக் காலவரன்முறையில் சரியாகக் காட்டுவது
1) எலஹர, ஜயகங்கை, மினிப்பே, ரிதிபென்தி, பப்பதந்த
2) ஜயகங்கை, எலஹர, மினிப்பே, ரிதிபென்தி, பப்பதந்த
3) எலஹர, ஜயகங்கை பப்பதந்த, மினிப்பே, ரிதிபென்தி
4) எலஹர, பப்பதந்த, ஜயகங்கை, மினிப்பே, ரிதிபென்தி
5) ரிதிபென்தி, எலஹர, பப்பதந்த, மினிப்பே, ஜயகங்கை (..........)

20) இலங்கை மீது மேற்கொள்ளப்பட்ட தென்னிந்தியப் படையெடுப்புக்களைக் கால ஒழுங்கில் சரியாகக்காட்டுவது
1) சேனன் - குத்திகன், எல்லாளன், பஞ்சதிராவிடர், 3ம் கிருஷ்ணன், 1ம் ராஜராஜன்
2) பஞ்சதிராவிடர், எல்லாளன், சேனன் - குத்திகன், 3ம் கிருஷ்ணன், 1ம் ராஜராஜன்
3) சேனன் - குத்திகன், எல்லாளன், 3ம் கிருஷ்ணன், பஞ்சதிராவிடர், 1ம் ராஜராஜன்
4) சேனன் - குத்திகன், பஞ்சதிராவிடர், எல்லாளன், 1ம் ராஜராஜன், 3ம் கிருஷ்ணன்
5) எல்லாளன், சேனன் - குத்திகன், 1ம் ராஜராஜன், பஞ்சதிராவிடர், 3ம் கிருஷ்ணன்

❖ **21 – 25 வரையான எல்லா வினாக்களுக்கும் ஒரு தலைப்பின் கீழ் ஐந்து விடயங்கள் தரப்பட்டுள்ளன. அவற்றுள் ஒன்று உரிய தலைப்பிற்குப் பொருந்தாது. அப்பொருந்தாத விடயத்தைத் தெரிவு செய்து அதன் இலக்கத்தைப் புள்ளிக்கோட்டில் எழுதுக.**

21) இலங்கையின் விவசாயத்துறை
1) ஆரியர் வருகைக்கு முன்னரே இலங்கையில் விவசாயம் நடைபெற்றதைத் தொல்லியற்சான்றுகள் எடுத்துக் கூறுகின்றன.
2) பண்டுகாபயன் காலத்திலேயே இலங்கையில் முதலாவது குளமும், முதலாவது கால்வாயும் அமைக்கப்பட்டதாக மகாவம்சம் கூறுகின்றது.
3) இலங்கையின் நீர்ப்பாசனத்துறை வரலாற்றில் மகாபராக்கிரமபாகுவின் காலம் ‘‘பொற்காலமாகும்’’
4) இடப்பெயர்வுக் காலத்தில் பல்வேறு காரணங்களால் நெற்பயிர்ச்செய்கை முக்கியத்துவம் இழந்தது

5) ஒல்லாந்தராட்சியின் போது கரையோரப் பிரதேசங்களில் பாரம்பரிய விவசாயத்தை முன்னேற்ற முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. (..........)

22) சிகிரியா .......
1) இலங்கையில் பாதுகாப்பை அடிப்படையாகக் கொண்டு உருவாக்கப்பட்ட முதலாவது தலைநகரமாகும்.
2) கி.பி 5ம் நூற்றாண்டில் இதனைக் காசியப்ப மன்னன் இராசதானியாக்கினான்.
3) இது பொலனறுவை மாவட்டத்தில் அமைந்துள்ள செங்குத்தான பாறைப்படைகளைக் கொண்ட எச்சக்குன்றாகும்.
4) இங்குள்ள கலையம்சங்கள் உலகப்பிரசித்தி வாய்ந்தவை.
5) இலங்கையிலுள்ள சிதைவுகளில் சிகிரியாவுக்கு சிறப்பான இடமுண்டு. (..........)

23) இலங்கையில் சோழராட்சி ......
1) 1ம் ராஜராஜன் அனுராதபுர அரசைக் கைப்பற்றிய பின் சோழப்பேரரசின் ஆதிக்கம் வட இலங்கையில் நிலைநாட்டப்பட்டது.
2) சோழரின் நிர்வாகத் தலைநகராக பொலநறுவை தெரிவுசெய்யப்பட்டது.
3) இராஜராஜன் 1017ல் தனது இரண்டாவது படையெடுப்பின் மூலம் முழு இலங்கையையும் சோழப் பேரரசின் கீழ்க்கொண்டு வந்தான்.
4) சோழராட்சி இலங்கையில் 77 ஆண்டுகள் வரை இடம்பெற்றது.
5) சோழராட்சியில் இந்துமதம் மறுமலர்ச்சியைப் பெற்றுக்கொண்டதோடு பௌத்தத்திற்கும் ஆதரவு வழங்கப்பட்டது. (..........)

24) சீதாவாக்கை ......
1) 1521ல் விஜயபாகு கொலையின் பின் கோட்டையரசின் பிளவினால் தோற்றம் பெற்றது.
2) இதன் வளர்ச்சியில் மாயாதுன்னையும் அவன் மகன் 1ம்இராஜசிங்கனும் முக்கிய பங்காற்றியுள்ளனர்.
3) மாயாதுன்னை பிற்காலத்தில் இந்துமதத்தை தீவியதோடு பெரண்டி கோவில் எனப்படும் இந்துக் கோவிலையும் அங்கு நிர்மாணித்தான்.
4) 1580 களில் இலங்கையிலுள்ள மிகப்பலங் கொண்டதும், பரந்து விரிந்ததுமான இராச்சியமாக விளங்கியது.
5) 1593 அளவில் இவ்விராச்சியம் மீண்டும் கோட்டை அரசுடன் இணைக்கப்பட்டது. (..........)

25) பெருந்தோட்டப் பயிர்ச்செய்கை .........
1) இலங்கையில் பெருந்தோட்டப் பயிருக்கான அத்திவாரம் ஒல்லாந்தரால் இடப்பட்டது.
2) முதன்முதலில் வர்த்தக அடிப்படையில் கறுவா பயிரிடப்பட்டது
3) இலங்கையின் கோப்பிப் பயிர்ச்செய்கையின் விருத்தியில் ஆளுநர் எட்வேட்பாண்ஸ் சிறப்பான பங்களிப்பை வழங்கியுள்ளார்
4) இலங்கையின் முதலாவது கோப்பித்தோட்டம் 1846ல் கண்ணொறுவ என்ற இடத்தில் ஆரம்பிக்கப்பட்டது
5) 19ம் நூற்றாண்டின் இறுதி முதல் இலங்கையின் ஏற்றுமதி வருமானத்தில் தேயிலை பிரதான இடத்தை வகித்தது (..........)

❖ **26 – 30 வரையான வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் (A), (B), (C), (D) என்னும் நான்கு மாற்று விடைகள் தரப்பட்டுள்ளன. அவற்றுள் ஒன்று அல்லது பல சரியான விடைகளாகும். அறிவுறுத்தலுக்கமைய சரியான விடையினைத் தெரிவுசெய்து அதன் இலக்கத்தைப் புள்ளிக் கோட்டில் எழுதுக.**

| 1 | 2 | 3 | 4 | 5 |
|---|---|---|---|---|
| A யும் B யும் மட்டும் சரி | B யும் C யும் மட்டும் சரி | C யும் D யும் மட்டும் சரி | A யும் C யும் மட்டும் சரி | ஒரு விடை மட்டும், அல்லது இரண்டுக்கு மேற்பட்ட விடைகள் சரி |

26) இலங்கையில் பௌத்தசமயம் பரவுதல் தொடர்பாக கீழே தரப்பட்டுள்ள கூற்றுக்களில் சரியானது / சரியானவை
A – வட இந்தியாவிலிருந்து கொண்டு வரப்பட்டு பரவலடைந்தது

B – மூத்தசிவ மன்னனால் கண்டக சைத்திய விகாரை அமைக்கப்பட்டது
C – தேநம்பியதீசன் காலத்தில் பௌத்த மதத்திற்கு அரச அனுசரணை கிடைத்தது
D – மகாசேனன் காலத்தில் இளவரசி ஹேமமாலாவினான் புனித தந்ததாது கொண்டுவரப்பட்டது. (..........)

27) இலங்கையின் நீர்ப்பாசன அபிவிருத்தி தொடர்பான பின்வரும் கூற்றுக்களில் சரியானது / சரியானவை
A - இலங்கையின் நீர்ப்பாசனவியல் வரலாற்றில் வசபனின் அட்சிக்காலம் ஒரு திருப்பு முனையாகும்
B - எலகர – மின்னேரி – கவுடுலு இணைப்புத் திட்டமானது ஒரு புதிய சகாப்தத்தின் தொடக்கமாகும்
C - 2ம் முகலன் மினிப்பே திட்டத்தை உருவாக்கினான்
D - நீர்ப்பாசனவியல் வரலாற்றில் மகாபராக்கிரமபாகுவின் ஆட்சிக்காலம் பொற்காலமாகும் (..........)

28) தம்பதெனிய இராசதானி தொடர்பான பின்வரும் கூற்றுக்களில் சரியானது / சரியானவை
A - 3ம் விஜயபாகு மன்னனால் தலைநகராகத் தெரிவுசெய்யப்பட்டது
B - "2ம் சிகிரியா" எனவும் அழைக்கப்பட்டது
C - யாப்பகூவவின் வீழ்ச்சிக்குப் பின் அது தலைநகராக்கப்பட்டது
D - போதி மாபாவின் கிளர்ச்சியுடன் இவ்வரசு வீழ்ச்சியடைந்தது (..........)

29) போர்த்துக்கேயர் ஆட்சியில் இலங்கையில் ஏற்பட்ட விளைவுகள் தொடர்பான கூற்றுக்களில் சரியானது / சரியானவை
A - புரட்டஸ்தாந்து கிறிஸ்தவமதம் அறிமுகப்படுத்தப்பட்டமை
B - நிலம் தொடர்பான வழக்குகளைத் தீர்ப்பதற்கு "லாண்டராத்" நீதிமன்றமுறை உருவாக்கப்பட்டமை
C - பதிவுத் திருமணமுறை நடைமுறைக்கு வந்தமை
D - கண்டி மன்னர்களுடன் தொடர்ந்தும் பகைமை பாராட்டியமை (..........)

30) 1972ம் ஆண்டு: அரசியல் யாப்பின் அடிப்படை இலட்சணங்கள் தொடர்பான கூற்றுக்களில் சரியானது / சரியானவை
A - நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதிமுறை
B - இலங்கை "ஸ்ரீலங்கா" என அழைக்கப்பட்டது
C - சிங்களம் அரசகரும மொழியாக்கப்பட்டது
D - பௌத்த மதத்திற்கு முதலிடம் வழங்கப்பட்டது (..........)

❖ **31 – 35 வரையான வினாக்களுக்கு சரியான விடையைத் தெரிவு செய்து அதன் இலக்கத்தைப் புள்ளிக்கோட்டில் எழுதுக.**

31) சத்தர்தரத்னாவலி, பூஜாவலி, சிதத்சங்கராவ போன்ற சிங்கள இலக்கியங்கள் தோற்றம் பெற்ற காலம்
1) தம்பதெனிய 2) யாப்பகூவ 3) குருநாகல்
4) கம்பளை 5) கோட்டை (..........)

32) உரோமிலிருந்து செம்பவளங்களை வரவழைத்து ருவென்வலிசாய எனப்படும் மகாதூபத்தை அலங்கரித்த மன்னன்
1) தேவநம்பியதீஸன் 2) வலகம்பா 3) துட்டகாமினி
4) பாதிகாபயன் 5) 1ம் விஜயபாகு (..........)

33) தற்போது கண்டியிலுள்ள தந்ததாதுக்கோவிலை அமைப்பித்த மன்னன்
1) நிஸங்க அழகேஸ்வரன் 2) சேனாசம்மதவிக்கிரமபாகு 3) 1ம் விமலதர்தசூரியன்
4) 2ம் ராஜசிங்கன் 5) 2ம் விமலதர்மசூரியன் (..........)

34) இலங்கையில் இறுதியாக உருவாக்கப்பட்ட மாகாணம்
1) வடமாகாணம் 2) வடமேல்மாகாணம் 3) வடமத்தியமாகாணம்
4) ஊவாமாகாணம் 5) சப்ரகமுவமாகாணம் (..........)

35) முதன்முதலில் தென்னிந்தியத் துணைப்படைகளின் உதவியுடன் மீண்டும் தன்னுரிமையை நிலைநாட்டிய அனுராதபுர ஆட்சியாளன்

1) மானவர்மன் 2) இளநாகன் 3) முகலன்
4) சூரதிஸ்ஸன் 5) 2ம் தாடோபதீஸன் (..........)

❖ **36- 40 வரையான வினாக்களில் இரண்டு கூற்றுக்கள் வீதம் தரப்பட்டுள்ளன. கீழே உள்ள அட்டவணையில் காணப்படும் 1, 2, 3, 4, 5 என்பவற்றில் மிகவும் பொருந்துவது எது என்பதைத் தெரிந்து அதன் இலக்கத்தைப் புள்ளிக்கோட்டில் எழுதுக.**

| முதலாம் கூற்று | இரண்டாம் கூற்று |
|---|---|
| சரியானது | பிழையானது |
| சரியானது | சரியானது |
| பிழையானது | பிழையானது |
| பிழையானது | சரியானது |
| சரியானது | சரியானதும் முதலாம் கூற்றினை நன்றாக விளக்குவதுமாகும் |

| முதலாம் கூற்று | இரண்டாம் கூற்று |
|---|---|
| 36) இலங்கையின் முதலாவது பாளி இலக்கியம் மகாவம்சமாகும் | மகாவமசம் ஆதிகாலம் தொடக்கம் மகாசேன மன்னன் காலம் வரையான வரலாற்றைத் தருகின்றது (..........) |
| 37) அனுராதபுரகால சந்திரவட்டக்கற்களில் சிங்கம், எருது, குதிரை, யானை போன்ற விலங்கு உருவங்கள் செதுக்கப்பட்டுள்ளன. | பொலநறுவைக்காலத்தில் இந்துமதம் பெற்றிருந்த முதன்மை நிலை காரணமாக சந்திரவட்டக்கற்களில் இவ்விலங்கு உருவங்கள் செதுக்கப்படவில்லை (..........) |
| 38) தேவனாகலைக் கல்வெட்டில் மகாபராக்கிரமபாகுவிற்கும், 2ம் கஜபாகுவிற்குமிடையே ஏற்பட்ட உடன்படிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளது | பொலநறுவை யுகத்தின் இறுதிச் சிங்களப் பெருமன்னன் நிஸங்க மல்லன் ஆவான் (..........) |
| 39) வீதிகளை அமைப்பதன் மூலம் பிரித்தானியரின் இராணுவக் கட்டுப்பாடு கண்டி மீது உறுதியாக ஏற்படுத்தப்பட்டது | 19ம் நூற்றாண்டில் வீதிகளை அமைப்பதில் மேஜர் ஸ்கின்னர், கப்டன் டோசன் ஆகியோரின் பணி மகத்தானதாகும் (..........) |
| 40) கல்வி ஆங்கில மொழியில் நடைபெற வேண்டும் என்று கோல்புறூக் சிபார்சு செய்தார் | நிர்வாக சேவையில் கடமைபுரிவதற்கு சுதேசிகளுக்குப் பயிற்சியளிப்பதும், ஐரோப்பிய கலாசாரத்தில் நாட்டங்கொண்ட ஒரு சமூக வகுப்பினரை உருவாக்குவதுமே இக்கொள்கையின் பிரதான நோக்கங்களாகும் (..........) |

## பகுதி - II

❖ **முதலாம் வினாவுக்கும் வேறு எவையேனும் மூன்று வினாக்களுக்கும் விடை தருக.**

**01)** தரப்பட்ட இலங்கைப் புறவுருவப்படத்தில் மேல்வரும் எல்லா இடங்களையும் குறித்துப் பெயரிட்டு, அவற்றுள் எவையேனும் இரண்டினைப் பற்றிச் சுருக்கமான வரலாற்றுக் குறிப்புகள் எழுதுக.

| | | |
|---|---|---|
| 1. சூகரதித்த | 2. மகியங்கணை | 3. ஹுருளுவாவி |
| 4. கொடவாய | 5. யாப்பஹுவ | 6. நல்லூர் |
| 7. மாணிக்க கங்கை | 8. சப்ரகமுவ மாகாணம் | |

(சரியாகக் குறித்துக்கொள்வதற்கு 01 புள்ளி, சிறுகுறிப்பு ஒவ்வொன்றுக்கும் 05 புள்ளிகள்)

**02)** மகாசேனனின் ஆட்சிக்காலம் முடியும் வரை இலங்கையின் வரலாற்றைக் கற்பதற்கு ஒரு வரலாற்று மூலாதாரம் என்ற வகையில் மகாவம்சத்தின் முக்கியத்துவத்தை மேல்வரும் தலைப்புக்களில் விளக்குக.
1) மகாவம்சத்தின் ஆசிரியரும் அது எழுதப்பட்ட காலமும் (02 புள்ளிகள்)
2) மகாவம்சத்தின் விபரங்கள் சாசனங்கள் மூலம் ஆதாரம் பெறுதல் (04 புள்ளிகள்)
3) ஒரு வரலாற்று மூலாதாரம் என்ற வகையில் மகாவம்சத்தின் குறைபாடுகள் (08 புள்ளிகள்)

**03)** அனுராதபுர காலத்து இலங்கையின் நீர்ப்பாசனமுறை வளர்ச்சியடைந்தமை பற்றிச் சுருக்கமாகப் பரிசீலனை செய்க. (14 புள்ளிகள்)

**04)** **“இலங்கையை ஆட்சிசெய்த சிரேஷ்ட மன்னர்களில் ஒருவனாக மகா விஜயபாகு மதிக்கப்படுகின்றான்”**
1) மகாவிஜயபாகுவின் பெற்றோரின் பெயரென்ன? (01 புள்ளி)
2) இவனுக்கெதிராகச் சோழருடன் சேர்ந்து கொண்ட அவனது தளபதிகள் இருவரைத் தருக. (2 புள்ளிகள்)
3) விஜயபாகு எதிர்கொண்ட உள்நாட்டு சவால்கள் இரண்டினைக் குறிப்பிட்டுச் சுருக்கமாக விளக்குக. (4 புள்ளிகள்)
4) விஜயபாகுவின் சாதனைகளை மதிப்பிடுக. (7 புள்ளிகள்)

**05)** பொலநறுவை இராச்சியத்தின் தளர்ச்சிக்கும் வீழ்ச்சிக்குமான காரணங்களை நுணுக்கமாகப் பரிசீலனை செய்க. (14 புள்ளிகள்)

**06)** **“இரண்டாம் பராக்கிரமபாகுவின் ஆட்சிக்காலம் இலங்கை வரலாற்றில் மிகவும் முக்கியமான ஒன்றாகும்”**
1) 2ம் பராக்கிரமபாகுவின் தந்தையின் பெயரென்ன? (01 புள்ளி)
2) 2ம் பராக்கிரமபாகுவால் எழுதப்பட்ட இரண்டு நூல்களின் பெயர் தருக. (02 புள்ளிகள்)
3) அவனது காலத்தில் வாழ்ந்த இலக்கிய வளர்ச்சிக்குப் பங்களித்த பிக்குமார் மூவரைத் தருக. (3 புள்ளிகள்)
4) 2ம் பராக்கிரமபாகுவின் சாதனைகளை சுருக்கமாக விளக்குக. (08 புள்ளிகள்)

**07)** மேல்வருவனவற்றுள் எவையேனும் இரண்டிற்கு சுருக்கமான வரலாற்றுக் குறிப்புரைகள் எழுதுக.
1) ஆரியச்சக்கரவர்த்தி மன்னர்கள்
2) சர்வஜன வாக்குரிமை
3) போர்த்துக்கேயரின் கண்டி மீதான படையெடுப்புக்கள்
4) இலங்கையின் அமைவிட முக்கியத்துவம்
5) கண்டி உடன்படிக்கை (ஒன்றிற்கு 7 புள்ளிகள்)

**08)** 1) சீதாவாக்கை இராச்சியத்தின் எழுச்சிக்கட்டங்கள் எவை?
2) இவ்வரசின் வீழ்ச்சிக்கான காரணங்களை ஆராய்க.

(7 + 7 = 14 புள்ளிகள்)

0

